# பொதுக்காலம் 23ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

பொதுக்காலம் 23ஆம் ஞாயிறு திருப்பலியில் பங்குபெற்று இறையாசீர் பெற்றுச் செல்ல வந்திருக்கும் இறைமக்களாகிய உங்களை இறை இயேசுவின் இனிய பெயரால் வாழ்த்துக் கூறி, வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

- தலைவனாய் இருப்பவன் தவறைச் சுட்டிக் காட்டத் தயங்கக்கூடாது
- அன்பே திருச்சட்டத்தின் நிறைவு
- ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

என்ற முப்பெரும் உண்மைகளை இன்றைய திருப்பலி வாசகங்கள் நமக்குத் தெளிவாய் எடுத்துரைக்கின்றன.

கிறிஸ்துவம் காட்டும் மீட்பு திருச்சமூகம் வழியே எய்துவதேயன்றி தனி ஒருவன் தானாகத் தேடிக் கொள்வதல்ல. அதனால் தான் இரண்டு அல்லது மூன்று பேர் சேர்ந்து ஒருமனப்பட்டு மன்றாடினால் கேட்டது கிடைக்கும், இறைவனது பிரசன்னத்தையும் பெற்றிடலாம் என்று விவிலியம் உறுதி அளிக்கிறது. எனவே இறை இயேசுவின் பெயரால் நாம் ஒன்று சேரும் போது விண்ணகமே மண்ணகத்திற்கு இடம் பெயர்ந்து வரும். ஏனெனில் இறை இயேசு எங்கு இருக்கிறாரோ அங்கே தானே விண்ணகம் இருக்கும். ஆனால் நாமோ வெறுப்பால், மமதையால், காழ்ப்புணர்ச்சியால் தனித்தனித் தீவாய் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

திருச்சபையில் பங்குப் பேரவைகள் அரசியலாக்காமல் இறை இயேசுவின் பெயரால் கட்டப்பட வேண்டும். தவறு செய்பவர்களோடு சமரசம் செய்து கொள்ளாமல், தவறினைச் சுட்டிக் காட்டி, அவர்கள் மனம் திரும்ப செயல்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாய் அன்பே நம் வாழ்வின் அடித்தளமும் ஆணிவேருமாய் அமைய வரம் வேண்டி, இத்தெய்வீகத் திருப்பலியில் பங்கேற்போம். அன்பான சமுதாயத்தை உருவாக்கிடுவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. எங்கள் நல் ஆயனாம் இறைவா!

எங்களது ஆன்மீக வாழ்விற்கு வழிகாட்டியாய் பணியாற்றும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் ஆம் என்றால் ஆம், இல்லை என்றால் இல்லை என்ற உறுதியான நிலைப்பாட்டினைப் பின்பற்றவும், அவர்களுக்கு உடல், உள்ள சுகமளிக்கவும், அவர் தம் இறைப்பணி நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதையாய் பலனளிக்கவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் ஊற்றே எம் இறைவா!

பத்துக் கட்டளைகளும் அடங்கி இருக்கும் ஒரே கட்டளையான "உன்னைப் போல் பிறரை நேசி" என்பதனை சிரமேற்கொண்டு பின்பற்றி, மனித நேயமிக்க மாமனிதர்களாக நாங்கள் வாழ உருமாற வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோதி காசி, தென்காசி.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com